உ

சிவமயம்




அமரர்

## செல்வன் ஜெயப்பிரசாத் சிவநேஸ்வரன்

அவர்களின்

# நினைவுமலர்

இளஞ்சுடர்

07.01.1998

**72, P.W.D.** காரியாலய வீதி, மாமூலை,
முள்ளியவளை, முல்லைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

பண்: கொல்லி

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்ல.்.துறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே

### திருவாசகம்

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தனைச்
சங்கரா ஆர் கொலோ சதுரர்
அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்ற தொன்றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்
திருப் பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யாதனிதற்சிலன் ஓர் கைமாறே

### திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
பேறணி புவனயோகமே யோக வெள்ளமே
மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசசே
ஏறணி கொடியெம் ஈசனேயுன்னைத்
தொண்டனே இசையுமாறிசையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பண்: பஞ்சமம்

சீரும் திருவும் பொலியச்
சிவ லோகநாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதுஆர் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமை மணவாளனுக்காள்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணில் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்
உண்மையாமெனின் உலகர்முன் வருகென உரைப்பர்

திருச்சிற்றம்பலம்

## திருப்புகழ்

உம்பர் தருத்தேனு மணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக்காக வனத் தணைவோனே
தந்தைவலத்தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானைமுகப் பெருமாளே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர்
# செல்வன் ஜெயப்பிரசாத் சிவனேஸ்வரனின் வாழ்க்கைச் சித்திரம்

பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெறுவதற்குக் கோடானுகோடி புண்ணியம் செய்திருக்க வேண்டும் அதிலும் கூன் குருடு, செவி நீங்கிப் பிறத்தலோ அரிதினும் அரிது. அங்ஙனம் நல்ல வாழ்க்கையைப் பெற்றகாலை ஞானமுங்கல்வியும் நயத்தல் அரிது. ஞானமுங்கல்வியும் வாய்த்து பூரண ஆயுளும் கிடைத்திட வேண்டும், இவைசித்திக்க ஆண்டவன் அருளே முதற்கண் கிடைத்திட வேண்டும். அப்பொழுதே பூரண மனித வாழ்க்கை அமையும். எமது வாழ் நாள் அளவு எமக்குத் தெரியாததொன்று ஆனால் அளந்தநாள் கடவார். என்ற திருமுறை கூறும் வாழ்க்கையும் நாம் மறந்து விடமுடியாது. எமக்கு வாழ் நாள் அளந்துவிடப்பட்டதொன்று அந்த எல்லையைக் கடந்து ஒருகணப்பொழுதும் இங்கு தரித்திருக்க முடியாது. இதுவே பேருண்மையாகும்.

இங்கு செல்வன் ஜெயப்பிரசாத் சிவனேஸ்வரனின் வாழ்க்கை நிகழ்வுகளை மனங்கொண்டு நோக்கினால் உலகநிலையாமை என்பதைச்சுலபமாக உணரமுடியும். இளமையும் யாக்கையும், செல்வமும் நிலையாது என்பதனை நாம் எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும்.

ஈழத்தின் கிழக்குத் திசைக்கடலருகே அமைந்த துறைமுகப் பட்டினம் முல்லைத்தீவு. பலவளங்களும் நிறைந்த ஒருபூமி அது. கடல்வளம் சூழ்ந்த பிரதேசம். வனவளமும் நிரம்பிக்காட்சிக்கு வனப்பைத் தருகிறது. நெல்விளையும் நிலங்களோடும் நீர் நிறைந்த குளங்களும் பல்கிப் பெருகிக்காணப்படுகின்றன. இங்ஙனம் வனம் நிறைந்து விளங்கும் பெரும்பதியிலே கார்காத்த வேளாகுலத்திலே சிவனேஸ்வரனுக்கும் பரமநாயகிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்தின் பேராய் 1988ஆம் ஆண்டு ஆடி மாதம் 18ஆம் நாள் ஒரு சற்புத்திரன் தோன்றினார். அப்பிள்ளைக்கு தந்தை தாயார் ஜெயப்பிரசாத் என்ற வளமான நாமத்தைச்சூட்டி அன்பு பண்பாய்ப் பேணி வளர்த்து வந்தனர்.

பிள்ளையும் நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்ந்து வந்தது. வாழுவாள் பிள்ளையை மண்விளையாட்டில் தெரியும் என்பதற்கமைய ஒடியாடி விளையாடி சிறுபராயத்தில் பெற்றாரையும்மற்றோரையும் மகிழ்வித்து வந்தது. இங்ஙனம்மாக ஐந்தாண்டையடைந்து வவுனிய C.C.T.M.S வித்தியாலத்தில் முதலாம் ஆண்டில் கல்விகற்கச் சேர்ந்தனர். அங்கு முதலாம் இரண்டாம் ஆண்டுக்கல்வியைச் சிறப்பாகக்கற்றுத் தேறி மூன்றாம் ஆண்டுக் கல்விக்காக முள்ளியவளை தண்ணீரூற்று இந்து மகாவித்தியாலயத்தில் ஜெயப்பிசாத்தைச் சேர்த்தனர்.

ஆண்டு தோறும் வகுப்பில் முதன்மை மாணவனாக விளங்கினார். விளையாட்டுத் துறையிலும் சிறப்பிடத்தில் இருந்து வந்தார். விளையாட்டுப் போட்டிகளிலும் பாடசாலை மட்டத்திலும் தொகுதி மாவட்ட மட்டத்திலும் சம்பியனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சம்பியன் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார். 4ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிக்கொண்டிருக்கும் போது நோயினால் பீடிக்கப்பட்டார். நோய்வாய்பட்டிருந்தாலும் பரீட்சையில் தோற்றி அதி விசேட் சித்தியைப் பெற்றுவிட வேண்டும் என்று விடாமுயற்சி செய்து கொண்டிருந்தார். மலேரியா நோய் அவரை மிகவும் வருத்திற்று. மலேரியா பில்சைப் பாவித்து பலவீனமுற்றதால் பனடோலைப் பாவித்து பரீட்சை எழுத முயன்றார். இதனால் நோய் முற்றிவிட புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு 8.12.97 திங்கள் மாலை 5.30 மணியளவில் இறைவனடிசேர்ந்தார். வந்த கருமங்களை முடித்துக்கொண்டு ஜெயப்பிரசாத்தும் தன் வரலாற்று ஏட்டினை நிறைவு செய்துகொண்டார். அப்பா அம்மா தவிக்கவும் சகோதர சகோதரங்களை துணையிழந்து ஏங்கவும் உற்றார் உறவினர் நண்பர்கள் கவலைகொள்ள வைத்துவிட்டுச் செல்வன் பிரசாத் விண்ணகவாழ்க்கையில் புகுந்து அமரராகி விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நேரத்தில் ஜெயப்பிரசாத்தின் வரலாற்றினை குறுங்கால வாழ்க்கையினை பின்நோக்கிப்பார்த்தால் மிக மிக உபயோக மானது. சிவனேஸ்வரன் பரமநாயகி தம்பதிகளுக்கு அறுவர் புத்திரப் பேறாய் கிடைத்தனர். அவர்களில் மூத்தபுத்திரர் ஜெயதாஸ். மூத்தபுத்திரி கவிதா ஆகும். இவர்களுக்கு அடுத்து அவதரித்தவர்தான் விஜிதா என்னும் பெண்ணாகும். 4ஆவது புத்திரனே ஜெயப்பிரசாத்தாகும். இவர்களுக்கு பின்னவர்களாகத் தம்பி ஜெயதீபனும் தங்கச்சியாக அனிதாவும் வந்து அவதரித்தனர். எனவே பிரசாத் நடுவராகத் தோன்னியமையால் தனக்கு அண்ணர் அக்கா தம்பி தங்கை தங்கை என்போரைப் பெற்ற ஒருவராக விளங்கிய பொருமையுடையவராவார்.

பெரியோரிடம் பணிவும் தம்மோடொத்தவரோடு அன்புங் கொண்டு ஒழுகி எல்லோர் மனதிலும் இடம்பெற்ற ஒருவரானார். ஆசிரியர்களின் சொற்கேட்டு நடந்தும் கீழ்படிவாய் இருந்தும் சகமாணவர்களோடு அன்பாய் பழகியும் மதிப்பிற்குரியவரானார். கல்வியில் கண்ணுங் கருத்தாய் இருந்தும் பரீட்சையில் முதன்மை பெற்றும் யாவரதும் மதிப்பைப் பெற்று வந்தார். சகோதரர்களுடன் பாசங்காட்டி நடந்தார். அவர்கள் பிணக்குற்று பிரிந்து நின்ற போதெல்லாம் நல்லுபதேசம் செய்து அவர்களின் பிணக்குகளைத் தீர்த்து இணைத்து வைத்து ஒற்றுமையைக் கட்டிக் காத்தார். சகோதர சகோதரர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்து அவர்களுக்கு வேண்டியன புரிந்து வந்தார். பாடசாலைக்குச் சென்று வருங்காலத்துச் சகோதரர்களின் பாதுகாவலாகவும் விளங்கினார். பெற்றோருக்கு மிகுந்த பயபக்தியோடு நடந்து வந்தார். "ஏவாமக்கள் மூவாமருந்து" என்ற பெரியோர் வாக்கிற்கு ஒரு இலக்கணமாகவும் இருந்து வந்தார்.

ஈழத்துத்தமிழர்களின் இன்றைய நிலையை எவராலும் விபரிக்க முடியாது. அல்லல் பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் ஓர் இனமாக இன்று தமிழர்கள் உலகத்திலேயே காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள். உலகமே கண்டுங் காணாதது போல் இருப்பது தெரிகிறது. பல அவலங்களுக் குள்ளே மனவேதனையோடு பயம் பீதிக்கும் மத்தியில் இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ந்துகொண்டிருக்கின்றார்கள். வானமே குடையாகக் கொண்டு வாழ்க்கை நடத்துவதும் அன்றாட வாழ்க்கைக்கே திண்டாடும் நிலையில் இடம்பெயர்வு நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. அத்தியாவசிய தேவைகளைக்கூட பூர்த்தி செய்யமுடியாத நிலையிலே இன்று ஈழத்தின் நாடோடியாக அலைந்து இடம்பெயர்ந்துகொண்டிருக்கின்றான். ஒருவேளை உணவாக பருக்கையற்ற கஞ்சிகூடக் கிடைக்காத நிலை. நோய்வந்தால் மருந்துகூடக் கிடைக்காத புதிர். இதனை யாரிடம் சொல்லி அழ. அண்டை அயலார்கூட தங்குறை தீர்க்கப்பாடுபடும் நிலை. எங்கு தீக்கிப்பார் யான் என்று எங்கித்தப்பித்துக்கொண்டிருக்கிறான் தமிழன்.

இந்நிலையில் பிரசாத்தின் அன்னை தந்தையும் சகோதரரும் எத்தனையோ இடம்பெயர்வைச் சந்தித்து விட்டனர். 1990ஆம் அண்டு யூன் மாதம் தொடங்கி தொடர்ந்து இடம் பெயர்ந்து 1994 ஆம் ஆண்டு இறுதியாக மாமுலை, முள்ளியவளைக்கு வந்தார்கள். அங்குதான் பிரசாத்துக்கு மலேரியா என்னும் நோயும் கண்டது. அல்லல் செய்து அலைத்தது. ஆருயிரை வைத்திய சாலையில் பறித்தது. தனையனை இழந்து தாய் தந்தையர்கள் அழுத கண்ணீருடன் சோகக் கடலில் மூழ்கினர். உடன் பிறப்புக்களும் துணையின்றித் தவிக்க உற்றார் உறவினர் நண்பர்கள் துயருற பிரசாத்தின் ஆன்மா இறைவன் பாதமலர் அடைந்து சாந்தி பெற்றது.

சாந்தி! சாந்தி! சாந்தி!

தேற்றம்.

"நெருனல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமையுடைத்திவ்வுலகு" திருக்குறள்.

**விருத்தப்பா**

ஐயமின்றி வாழவந்தான் அரனிடத்தில் சேர்ந்துவிட்டான்.
பையமீவக உலகளைக் கை விடுக் பையலுந்தான்.
வையத்து வாழ்வாங்கு வாழ வழிசமைத்திட்டான்.
நைவதென்னோ? நானிலத்தில் பிறந்ததார்கள் இறப்பரன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிரவனின் கண்ணீர் அஞ்சலி

எம் இதயத்தோடு இணைந்த இனியவனே ஜெயபிரசாந்த் கழகத்தின் கண்மணியாய் இருந்து எம்மீது அன்பையும், பாசத்தையும் பொழிந்தாய். இந்த இளவயதில் உனது அறிவையும், விளையாட்டின் மீதுள்ள விவேகத்தையும் பார்த்து மெய்மறந்தோமே. கழகத்தின் விடிவிற்காய் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாய் விளங்கிய உம்மை இழந்து நிற்கும் தோழர்களின் உள்ளக் குமுறலை அறிவீரோ. ஏன் தம்பி இந்த வயதில் எம்மை மறந்தீர். உமது மதிமுகம் கண்டு தினம் மகிழ்ந்தோமே. மீண்டும் வருவாய் என்று கதிரவனின் மைதானத்தில் காத்திருந்தோமே. கண்மணியே எங்கு சென்றாய். எம்மைத் தேடி வருவாயென்று வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தோமே. கலங்க வைத்து எம்மைக் கண்ணீரில் விட்டு விட்டாயே. காரிருளிலும் உம் திருமுகத்தைப் பார்க்க முடிந்தால் ஒளியைப் பொல் பிரகாசிப்பவனே. எங்கு ஓடி ஒளித்தாய். இது விளையாட்டு மைதானம் அல்ல. ஓடிவா. எம்மை நாடிவா, எதிர்பார்க்கின்றோம் எழுந்துவா. எமது கழகத்தின் கண்மணியை இழந்து ஆறாத் துயரில் மீளாது வருந்தும் பெற்றோர், உடன் பிறப்புக்கள், மற்றும் உறவினர்களுடன் நாமும் இணைந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கிறோம். வளர்க அன்புக் கினியவனின் நினைவுகள்.

இணைபிரியா கழகத்தோழர்கள்
கதிரவன் விளையாட்டுக் கழகம்.
மாமூல், முள்ளியவளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கல் உரை

தண்ணீரூற்று இந்து வித்தியாலயமதில்
நான்காம் ஆண்டிலே நன் மாணாக்கனாய்
நற் கல்வி பயின்று வந்தீர்
நம்மை விட்டு எங்கு சென்றீர்?!

சிந்தை கவரும் சீருடை அணிந்தே
சிந்தனை நிறைந்த இறப்புறு மதியும் கொண்ட
பல் ஆசிரியரும் போற்றும் பண்பு நிறைந்தவனாய்
பல திறமை காட்டி நின்றீர் பாரை விட்டகல்வதற்கோ?!

இன்முகத்துடனே முன்வாங்கில் வீற்றிருப்பீர்
இல்லை என்று கூறாது நண்பர்க்கு உதவிடுவீர்
உயர் குணம் படைத்திட்ட உமதருமைச் செயல்களை
நாளெல்லாம் நினைக்கும் நண்பர்களை தவிக்க விட்டெங்கு
சென்றீர்?!

கல்வியுடன் நின்றிடாது கலைகளிலும் ஈடுபட்டீர்
விளையாட்டில் வீரனாய் விளங்கி வெற்றிக் கிண்ணம் பெற்றீர்
வித்தியாலயத்திற்கே ஒளி விளக்காய் திகழ்ந்தீரே
விதியும் வெல்ல விண்ணை நீர் அளந்தீரோ!

சின்னஞ் சிறு வயதில் மாணவப் பருவமதில்
எம் சித்தம் கலங்க விட்டகன்றீரோ
அவர் ஆத்மா சாந்திக்காய்
என்றென்றும் பிரார்த்திப்போம்.

வகுப்பாசிரியர்
திருமதி பேரின்பவதனி தனபால சிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு/தண்ணீரூற்று இந்துவித்தியாலய
## அதிபரின் இரங்கற் செய்தி

எமது பாடசாலை நான்காம் ஆண்டு மாணவன் செல்வன் சிவனேஸ்வரன் - ஜெயப்பிரசாத் அவர்கள் இறைபாதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், சூழ்ந்த வேதனையும் அடைந்தேன். 1995ம் வருடம் இரண்டாம் ஆண்டில் இருந்து எமது பாடசாலையிற் கல்வியைத் தொடர்ந்த மாணவன் ஜெயப்பிரசாத் கல்வி, கேள்வியில் மட்டுமல்ல விளையாட்டு நற்பண்பு, நல்லொழுக்கம் என்பவற்றிலும் எமது பாடசாலையின் தனியான முத்திரை பதித்தவர்.

விருட்சம் ஒன்று அரும்பிலேயே கருகிவிட்டாலும் தன் இறுதிப் பயணத்திற்கு முன் ஆண்டு இறுதித் தேர்வின் அவர்படைத்த சாதனைகள் எம் கண்களைப் பனிக்கின்றன. இவரின் துடிப்பும், முயற்சியும் அதிபர், ஆசிரியர் ஆகிய எம் உள்ளத்தில் அகல் விளக்காகும். அவரின் பிரிவாற்றுயருறும் குடும்பத்தினருக்கு பாடசாலை சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்கும் பிராத்திக்கின்றேன்.

சி.அமிர்தலிங்கம்
அதிபர்,
மு/தண்ணீரூற்று இந்து வித்தியாலயம்,
முள்ளியவளை.
22.12.92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயிராம்

## பாட்டு

### அன்பு மச்சாள் ஜெனனியின் அவலக்குரல்

பிரசாத் நீ புருசோத்மன் வடிவே ஐய்யா,
உன் அப்பாவின் துடிப்பையோ கேளாய்யையா,
உன் அம்மாவின் துயரத்தைப் பாராய்யய்யா,
உன் அண்ணாவின் கண்ணீரோ ஆறாகுது,
இன்று நீ பூவுலகம் மாறுகின்ற நாளாயிது (2)
(பிரசாத்)

உன் அக்காக்களின் அழுகைக் குரல் கேட்கின்றதடா
உன் தம்பி இன்று தனிமரமாய் துடிக்கின்றான்.
உன் தங்கைக்கோ ஒன்றும் தெரியாமல் தவிக்கின்றாள்.

உன் படிப்பாலே உன் உயிரை இழந்தாயய்யா
அன்று நீ பாடசாலை இல்லத் தலைவனடா
இன்று நீ பூவுலக இல்லத்தலைவனடா
பிரசாத் உன் உயிர் சாந்தியடைய போற்றுகின்றோம்.

ஜெய்சாயிராம்

## ஓம் சாயிராம்

முல்லைத்தீவை பிறப்பிடமாகவும் மாமுலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவனேஸ்வரன் ஜெயபிரசாத் அவர்கள் மாமுலை சாயி நிறுவனத்தில் நடத்தப்படும் பஜனைகள், சேவைகள் ஆகியவற்றில் நல்ல ஈடுபாடு உடையவராகவும் சிறுவயதினராக இருந்த பொழுதிலும் இரவு பகல் பாராது குறித்த நேரத்தில்வந்து பக்தி பூர்வமாக தனது பணிகளை செய்து வந்தார். அவரின் பிரிவு எமது நிறுவனத்திற்கு பெரிய இழப்பாகும் அவரின் ஆத்மா சாந்தி அடைய பகவானை பிரார்த்திக்கின்றோம். "சத்யசாயிபாபா அருள்வாக்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்று உனக்குச் சொல்வேன் எப்படி
இருந்தாலும் நீ என்னுடையவனே.
உன்னை நான் கை விடமாட்டேன்.
நீ எங்கிருந்தாலும் எனக்கண்மையில்தான் உள்ளாய்.
எங்கிருந்தாலும் நீ என் கைக்குள்ளேயே"

-பாபா-

மாமுலைசாயி தண்ணீரூற்று அன்பர்கள்.

ஜெய்சாய்ராம்

## இரங்கலுரை

மானிடராய் பிறப்பவர்கள் இறப்பது உறுதி தானென்றாலும் வாழ்ந்து-வளர்ந்து, ஆண்டு - அனுபவித்து கண்டு-களித்து, நடந்ததை எடைபோட்டு எண்பது வயதில் இறப்பது நியதி - ஆனால் ஒன்பது என்பது ஓடிடும் வயதா? இல்லை ஒருக்காலும் இல்லை.

இது,
தந்து பறித்த தயவற்ற செயலே
அதிலும்,
அளவிற்கு மீறிய துடிப்பும்,
கூரிய அறிவும்,
மிகுந்த விளையாட்டுத் திறனும்
தனது அணிகலனாய் கொண்டு
துள்ளித்திரிந்த பள்ளிச் சிறுவன்
செல்வன் சிவனேஸ்வரன் ஜெயபிரசாத்தை
காலன் கவர்ந்து சென்றது.
இயற்கைக்கு ஒவ்வாத கொடூரச் செயல்
ஜெயபிரசாத்தை பிரிந்து,
மீளாத்துயரில் மூழ்கிநிற்கும்
பெற்றோர் - உற்றோர் தம்மோடு,
அயலவர்கள் - திணைக்கள ஊழியர் நாமும்
கலங்கி நிற்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது ஆத்மசாந்திக்காக
பிரார்த்தனை செய்கின்றோம்.

நிறைவேற்றுப் பொறியியலாளர் ஊழியர்கள்,
வீதி அபிவிருத்தி திணைக்களம்,
முல்லைத்தீவு.

## ஓம் பற்றி சாயிராம்

விண்ணோடு விளையாடும் சாயிநாதனே
உயிரோடு கலந்து விட்டாய் சாயிநாதனே
காற்றொடு விளையாடும் சாயிநாதனே
கருத்தினிலே நிலைத்து விட்டாய் சாயிநாதனே

வனம் ஆட மனம் ஆடிடுமே (பிருந்தா)
காற்றாட உலகாட முடி ஆடுமே
மலையேழு கடலேழு ஸ்வரமேழுதான்
அதில் நீ இல்லா இடமேது சாயிநாதனே.

கண் தந்து ஒளியானாய் சாயிநாதனே
குரல் தந்து ஒலியானாய் சாயிநாதனே
உடல் தந்து உயிரானாய் சாயிநாதனே
மனம் தந்து தெய்வமானாய் சாயிநாதனே.

## ஓம் சாய்ராம்

செல்வன் - சிவனேஸ்வரன் - ஜெயப்பிரசாத்தின் மறைவையொட்டி நாம் மிகவும் கவலையடைகின்றோம் அத்துடன் அவரின் பிரிவைத்தாங்காது ஆராத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது பெற்றோர், சகோதரிகள் உற்றார் உறவினர்களுடன் நாமும் பங்குகொள்கின்றோம் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
திரு. திருமதி. கோபாலகிருஷ்ணன்
"கண்ணன் இசைக்குழு"
பிரசாந்தி நிலையம்
நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வன் சிவனேஸ்வரன் ஜெயப்பிரசாத்தின் மறைவையொட்டி நாம் மிகவும் கவலையடைகின்றோம் அத்துடன் அவரின் பிரிவைத்தாங்காது ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் பெற்றோர், சகோதரர் சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர்களுடன் நாமும் பங்கு கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
சக ஊழியர்கள் இயக்குனர்கள்
R.C.&.D.C
அனுராதபுரம்.

## பொன்மொழிகள்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
அன்பே சிவம் அறிவே தெய்வம்
தாயே கோயில் தந்தையே தெய்வம்
பிறர்குதவி செய்தால் தனக்குதவி தானே வரும்
கள்ளச் சரீரம் வளர்ப்பவன் கடவுளுக்கு விரோதி
கூலிக்குச் செய்வோர் வேளைக்குச் சாப்பிடுவார்
முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்
நித்தம் போக முத்தம் சலிக்கும்
நித்தம் உண்ண உறவு தேயும்
ஒருவரை வருத்தி உடம்பை வளர்க்காதே
தோன்றிய உருவம் மறைவது திண்ணம்
பணம் அற்றவர் பிணத்துக்குச் சரி
நீதியைக் கண்டு நிறைவுறத் தேடு
வேலையைச் செய்தோர் கூலியைப் பெறுவார்
வயிற்றுப் பிளைப்புக்கு மானம் அழியாதே
உற்றார் அன்பு உழைக்கும் வரைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை அன்பு உடல் அழியும் வரை
செய் நன்றி மறந்தோர் எய்நன்றியும் மதியார்
தன்னை உணர்ந்தோர் ஒருவரை இகழார்
தன்னை இழற்தோர் தலைவனை அறிவார்
ஆசையை அடக்கி:ஆள் அன்பைப் பெருக்கி வாழ்
மதியுண்டு மயங்கில் மதியாதுலகம்
குலத்தின் பெருமையை குணத்தால் காணலாம்
பாடுபட்டோர் பட்டம் பெறுவர்
உண்மையை உணர்ந்தோர் உத்தமனாவார்
கல்வியே கருத்தனம்
கற்கை நன்றே கற்கை நற்றே பிச்சை புகினும் கற்கை நன்றே
மூத்தோர் சொல்வார்த்தை அமுதம்
ஏவா மக்கள் மூவா மருமந்து.

**நினைவு மலர்**

**'இளஞ்சுடர்'**

**கவிதை இயற்ற உதவியவர்**

**வித்துவ சிரோன்மணி வ. செல்லையா.**

## எப்படி உன்னை மறப்போம்

அன்புச் செல்வமே பிரசாத்தா! எப்படியடா மனம் வந்தது. எங்களைப்பிரிய உன்னைவிட்டு நாங்களும் இருக்க மாட்டோம். என்பது உனக்கும் தெரியாததல்ல. இப்படி இருந்தும் எங்களைப் பிரிந்து சென்றாயே எப்படியடா உன்னை மறப்போம். உன்னை வைத்து எத்தனை கனவுகள் கண்டோம். எல்லா கனவுகளையும் பாழடித்து விட்டு மறைந்தாயே. வாழ்நாள் முழுவதும் எங்களை மீழாத சோகத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனிடம் சென்றாயே பிரசாத்தா! எங்கு சென்றாலும் உன்முகமே தெரிகின்றது. எதை நினைத்தாலும் உன் நனைவே வருகின்றது. எங்களை மறக்கக் கூடிய விதத்திலா எங்களுடன் வாழ்ந்தாய். எங்கு சென்றாலும் என்ன நினைத்தாலும் உன் பாலமுருகன் போன்ற அழகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமே தோன்றுகின்றது. உன்தம்பி தீபனும் உன் தங்கை அனிதாவும்.தங்களை வழிநடத்த இனி யார் இருக்கின்றார்கள் என்று விம்முகின்றார்களே அவர்களை எப்படி விட்டுப் பிரிய மனம் வந்தது உனக்கு கவியக்கா, விஜியக்கா ஜெயதாஸ் என்று பாசம் பொங்கக் கூறுவியே இனி யார் அப்படி எங்களை கூப்பிடுவார் என்று கலங்கித் துடிக்கின்றார்களே. அவர்களுகு நீ என்ன கூறப்போகின்றாய். அப்பா, அப்பா என்று என்மடியிலேயே இருப்பியே அம்மா, அம்மா என்று பாசம் பொங்க கூறுவியே அப்பா வவுனியாவில் இருந்து வருகின்றார் என்றால் இரவு 12 மணியென்றாலும் வழிமேல் விழிவைத்து காத்திருப்பியே அதிகாலை 4மணிக்கு என்மேல் ஏறிப்படுத்துறங்குவியே போட்டிக்கு வரும் தம்பி தீபனைத் தள்ளிவிட்டு என்மீதே உறங்குவியே இவைகளையெல்லாம் நாங்கள் எப்படி மறப்போம் எங்களை வாழ்நாள் முளுக்க கலங்கவைத்துச் சென்றாயே எப்படி உன்னை மறப்போம். உன்பிரிவால் துயருறும் அப்பா அம்மா ஜெயதாஸ் அண்ணா, கவியக்கா, விஜியக்கா, தீபன்தம்பி, அனிதா தங்கை.

## செல்வன் சிவனேஸ்வரன் ஜெயப்பிரசாத்தின் மறைவையொட்டி கவலையுறும் உறவினர்கள்

வே. முருகேசு - நாகேஸ்வரி (பெரியப்பா, பெரியம்மா) (முல்லைத்தீவு)
வசீகரன், சசிகரன், தீபா, சுதாகரன (அண்ணாமார், அக்காமார்)

கி. இரத்தினசிங்கம், கமலேஸ்வரி (பெரியப்பா, பெரியம்மா) (பொலிகண்டி)
தாரணி, அகல்யா, கௌசிகா (அக்காமார் தங்கை)

ச. விக்னேஸ்வரன் - தங்கேஸ்வரி (சித்தப்பா, சித்தி) (பழம்பாசி, நெடுங்கேணி)
ஐவ்வனா தங்கை (தங்கை)

அ. கந்தையா (காலஞ்சென்றவர்) தந்தையின் அண்ணா, சிவபாக்கியம் பெரியப்பா, பெரியம்மா (ஏழாலை)
பாமதி, பாமினி (அக்காமார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. பாலசுந்தரம் பெரியப்பா (காலஞ்சென்றவர்) (முல்லைத்தீவு)
ம. தெய்வேந்திரன் - செல்வராணி (மாமா, மாமி)
கோபிநாத், ஜனனி (மச்சாள், மச்சான்) (முல்லைத்தீவு)

ம. சிவலிங்கம் - செல்வலட்சுமி (மாமா, மாமி)
நிசா, சிந்து, சுரேந் (மச்சாள், மச்சான்) (கனடா)

ம. அமுதலிங்கம், சுபத்திரா (மாமா, மாமி)
அருணிகா, அர்வின் (மச்சான், மச்சாள்) (சுவிஸ்லாந்து)

ம. மோகனலிங்கம் - வனிதா (மாமா, மாமி)
சிந்தியா, ரோசிகா (மச்சாள்மார்) (கனடா)

இ. நந்தகுமாரன் - சத்தியேஸ்வரி (சித்தப்பா, சித்தி)
அபிலாஷ் (தம்பி)

செல்லத்துரை (காலஞ்சென்றவர்) - இலங்கம்மா (மாமா, மாமி)
ஜெகதீஸ்வரன், சந்திரகாந்தன், சுமதி, கலாமதி, மனோகரன், அசோகன், கலாதரன், பாஸ்கரன் (மச்சாள் மச்சான்மார்) (ஜேர்மனி)

நடராசா (காலஞ்சென்றவர்) - பொன்னம்மா மாமா மாமி (நெடுங்கேணி) -
யுகனேஸ்வரி, நேசரத்தினம் (காலஞ்சென்றவர்), ராணி, சிங்கராசா, பத்மநாதன், பேபி, தேவி, சாந்தி (மச்சான்மார் மச்சாள்மார்)

வேலாயுதம் - புனிதவதி மாமா, மாமி
கிருபாகரன் - சோனியா (மச்சான், மச்சாள்மார்) (கோடம்பாக்கம், இந்தியா.)

பேரன்பேத்தி - கா. அப்புத்துரை, அ. அன்னப்பிள்ளை (காலம் சென்றவர்கள்)

வ. மயில்வாகனம் - ம. வள்ளிநாயகி (கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எமது அன்புச் செல்வத்தின் இறுதிச் சடங்கின் போது சகலவழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த சகல அன்புள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
பெற்றோர்,
சகோதர, சகோதரிகள்.

**Admiral Graphics**
Printing & Typesetting
403 1/1, Galle Road, Colombo - 6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org